திருநெல்வேலி, முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் – திரு. மு. சிவகுமார், எம்.எஸ்ஸி.,பி.எட்., எம்.பில்.,

ப.மு.எண்.11421/அ1/2024 நாள் 09.12.2024

பொருள் - தமிழ்நாடு அமைச்சப்பணி - பள்ளிக் கல்வித் துறை - இளநிலை உதவியாளர் நேரடி நியமனம் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக்குழு 24.07.2022 அன்று நடைபெற்ற தொகுதி IV தேர்வு -தமிழ்நாடு அரசு அரசுப் பணியாளர் தேர்வாணைம் மூலம் தேர்வு செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்களுக்கு பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - சார்பு.

பார்வை 1 அரசாணை (நிலை) எண்151 பள்ளிக் கல்வி (பக.1-(1)த்துறை நாள் 09.09.2022

2 சென்னை-03 தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய குழு செயலரின் கடிதம் எண். 1075/PSD-C2/2023-1நாள். 25.08.2023

3 சென்னை, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) ந.க.எண் 56703/அ4/இ1/2023 நாள். 21.09.2023

4 திருநெல்வேலி, முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்ந.க.எண்.7788/அ1/2023, நாள் 27.09.2023

5 மாடம்பிள்ளைதர்மம் அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியரின் கடிதம் ந.க.எண் 84/2024 - 2025 நாள்19.11.2024

---

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 24.07.2022 அன்று நடைபெற்ற தொகுதி IV தேர்வு மூலம் இளநிலை உதவியாளர் பதவிக்கு தற்காலிக அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு பார்வை 02-ல் கண்ட செயல்முறைகள் மூலம் பள்ளிக் கல்வி துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பட்டியல் பார்வை 03.ல் காணும் செயல்முறைகள் மூலம் பெறப்பட்டது. அதனடிப்படையில் பார்வை 04-ல் கண்டுள்ளவாறு நியமன ஆணை வழங்கப்பட்டது.

அவ்வாறு தமிழ்நாடு அமைச்சுப்பணியில் உள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்தில் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட கீழ்க்கண்ட பணியாளருக்கு பணிவரன்முறை செய்யகோரி பார்வை 05-ல் காணும் கடிதம் மூலம் கருத்துரு பரிந்துரை செய்து பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையிலும், பார்வை 1-ல் காணும் அரசாணையின்படி கீழ்க்கண்ட பணியாளர்களுக்கு அவரது பெருக்கெதிரே குறிப்பிட்டுள்ள நாளில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் | தேர்வாணைய தர வரிசை எண். | பணிவரன்முறை நாள் |
|---|---|---|---|
| 01 | திருமதி.ஜெ.சாந்தம்மாள்,<br>இளநிலை உதவியாளர்,<br>அரசு உயர்நிலைப்பள்ளி,<br>மாடம்பிள்ளைதர்மம்<br>திருநெல்வேலி மாவட்டம் | 282<br>(24.07.2022ல் நடைபெற்ற தேர்வு) | 29.09.2023<br>முற்பகல் |

## நிபந்தனைகள்

1. இந்த பணிவரன்முறை ஆணையானது, பார்வை 04ல் காணும் நியமன ஆணையில் நிபந்தனை எண்.07ல் உள்ள சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் இந்த நியமனம் சார்ந்து நிலுவையில் உள்ள தொகுதி IV- ன் கீழ் உள்ள பணிகளுக்கான நியமனம் தொடர்பான வழக்குகளின் தீர்ப்புக்கு உட்பட்டதாகும்.
2. இப்பணியாளர் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுவார்.
3. தகுதிகாண் பருவ காலத்தில் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியினையும், தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் தேர்விலும் கண்டிப்பாக தேர்ச்சி பெற வேண்டும்.
4. பணிவரன்முறை செய்த விவரத்தினை சார்ந்த பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

இணைப்பு- பணிப்பதிவேடு

முதன்மைக் கல்வி அலுவலர்,
திருநெல்வேலி.

பெறுநர்
திருமதி. ஜெ. சாந்தம்மாள்,
இளநிலை உதவியாளர், அரசு உயர்நிலைப்பள்ளி, மாடம்பிள்ளைதர்மம்
(உரிய அலுவலர் மூலம்)
நகல்-
தலைமை ஆசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி, மாடம்பிள்ளைதர்மம்.